DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 238/2019
**Depositions of PW 10**

| Name | ராஜா | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th Day of June 2025

Signature of Witness.

<u>**20-06-2025**</u>
எதிரி ஆஜர்.
<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது தென்காசி மாவட்டம், கரிவலம் வந்த நல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29-01-2019 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கார்த்திக் நிலைய பணியில் இருந்தபோது, பெருமாள்பட்டியைச் சேர்ந்த சின்னச்சாமி மகன் பெத்துமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 21/2019 இதச பிரிவுகள் 279, 338, 304(ஏ) -இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்று மதியம் 12.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சின்னராமன் மற்றும் செல்லப்பாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ -5** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் பெத்துமணி, ராஜா, சரவணக்குமார், செல்வி, பிச்சைப்பாண்டி, செந்தில்குமார், சந்திரசேகர், பிச்சைமணி, கோகிலா, மணிகண்டடன், செல்லப்பாண்டி, சின்னராமன், குபேந்திரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் இறந்துபோன முத்துராமன் என்பவரது உடலின் மீது சிவகாசி அரசு மருத்துவமனையின் பிணவறையில் வைத்து பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.–6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான கருப்பையா, பரமன் ஆகியோரை விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் தொடர்புடைய TN 59 BM 6647 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் நான்குசக்கர வாகனத்தினை விபத்துக்குள்ளான TN 59 AZ 1881 என்ற பதிவவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினையும் வேண்டுகோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்வுக்காக அனுப்பிவைத்தேன். விபத்தில் இறந்துபோன முத்துராமன் என்பவரது இறப்பின் காரணம் அறியும் பொருட்டு, வேண்டுகோள் கடிதத்துடன் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். 31–01–2019 ஆம் தேதிக்கு குமிழங்குளம் விலக்கு அருகே வைத்து எதிரி சரவணக்குமாரை கைது செய்து நிலையம் அழைத்துவந்து, நிலைய பிணையில் விடுவித்தேன். மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். TN 59 BM 6647 என்ற பதவெண் கொண்ட ஈச்சர் வாகனத்தின் **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.–7** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. TN 59 AZ 1881 என்ற பதிவவெண் கொண்ட **இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.–8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன முத்துராமனின் உடலின்மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் சிந்தியா என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் விபத்து பதிவேடு பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.–9** ஆக குறியிடு செய்யப்படுகிறது. இறந்துபோன முத்துராமனுக்கு பதிவு செய்யப்பட்ட **விபத்து பதிவேடு அ.சா.ஆ.–10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் காயமடைந்த அ.சா.–5 செந்தில்குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். பின்னர் காவலர் வினோத், வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் கார்த்திக் ஆகியோரை அவர்களது வாக்குமூலங்களை தனித்தனியே பதிவு செய்துஇத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது 279, 338, 304 (ஏ) இதச இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.ஆ.–1 புகார்மனுவில் பெத்துமணி தானும் தன்னுடன் வந்த ராஜாவும் பயணித்ததாக கூறப்படும் இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.–7 சந்திரசேகர், அ.சா.–8 பிச்சை மணி ஆகிய இருவரும் சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தார்களா அல்லது நான்கு சக்கர வாகனத்தில் வந்தார்களா என்ற விவரத்தினை அ.சா.ஆ.–1 புகார்மனுவில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.–1 பெத்துமணி என்னிடம்

அளிதத வாக்குமூலத்தில் எதிரியையும், விபத்து குறித்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்ற விவரத்தினை என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல.

(2) பார்வை மகஜர் சாட்சியான அ.சா.–6 செல்லப்பாண்டி என்பவர் விபத்தில் இறந்துபோன நபரின் உறவினர் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அ.சா.ஆ.–5 மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு மேற்கே கோபால் என்பவருக்கு சொந்தமான தரிசு நிலம் உள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு அருகே கோவில் அல்லது தேவாலயம் இருப்பதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கோவில் இல்லை, தேவாலயம் உள்ளதை காண்பித்துள்ளோம். சாட்சிகள் பெத்துமணி, ராஜா, சந்திரசேகர், பிச்சைமணி ஆகியோர் நாங்கள் சம்பவத்தை கேள்விப்பட்டு, ஊரிலிருந்து நாங்கள் நால்வரும் சேர்ந்து சம்பவ இடத்திற்கு வந்தோம் என்று கூறவில்லை என்றால் சரியல்ல.

(3) சிவகாசி சாட்சியாபுரம் என்ஜீஓ காலனியில் உள்ள சோலைமலை என்வரது இறப்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சாட்சிகள் பெத்துமணி, ராஜா, சந்திரசேகர், பிச்சைமணி ஆகியோர் வந்துவிட்டு திரும்பச் செல்லும்போதுதான் விபத்து நடந்தது என்பதை என் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி இறந்துபோன சோலைமலையின் உறவினர்களை விசாரித்து இறப்பு நிகழ்வில் கலந்து கொள்ள பெத்துமணி, ராஜா, சந்திரசேகர், பிச்சைமணி ஆகியோர் வந்து சென்றார்களா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சம்பவத்தில் காயமடைந்ததாக கூறப்படும் அ.சா.–5 செந்தில்குமார்

என்பவரை நான் எந்த விதத்திலும் விசாரிக்கவில்லை என்றாலும் அவரது வாக்குமூலத்தை பொய்யாக பதிவு செய்து கொண்டேன் என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தானது இறந்துபோன முத்துராமனின் கவனக்குறைவினால் நிகழ்ந்தது என்றாலும், எதிரியால் விபத்து நிகழ்ந்தது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.